நிறுத்து

இலங்கை, இந்திய அரசுகளே தமிழ் மக்கள் மீதான யுத்தத்தை நிறுத்து!

பல்வேறு மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அடிப்படையில் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரித்து கனடிய மண்ணில் உருவாக்கப்பட்ட அமைப்பே தமிழர் வகைதுறைவள நிலையமாகும்.

இ.லங்கை தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைத் தொடர்ந்து மறுத்துவரும் சிங்கள அரசாங்கங்களின் தொடர்ச்சியான வன்முறை அரசியலை மறுத்து சுமூகமான முறையில் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்துள்ளோம். ஆனால் இன்றுவரை சிங்கள அரசுகளோ தமிழ் மக்களுக்கான ஆரோக்கியமான தீர்வு எதனையும் வெளிப்படையாக வைக்காமல் தமிழ் மக்களை தொடர்ந்தும் இராணுவத் தீர்வுக்கூடாக கொன்று குவிப்திலும் அகதிகளாக்குவதிலும்தான் ஆர்வம் கொண்டு செயற்படுகிறது.

இலங்கை அரசின் திட்டமிட்ட இனப்படுகொலைக் கலவரத்தைத் தொடர்ந்து, இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆயுதப்பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கிய இந்திய அரசு தனக்குந் சாதகமான அரசியல் குழுக்கள் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தலைமையில் இல்லையென்ற காரணத்தால் சகோதர படுகொலைகளை ஊக்குவித்தது. இயலாமல் போனபோது இலங்கை அரசிடமிருந்து தமிழ் மக்களை பாதுகாப்பதாகக்கூறி தனது படைகளை அனுப்பி புலிகளுடன் யுத்தம் என்ற போர்வையில் தமிழ் மக்களை கொன்றழித்தது.

இலங்கை இந்திய அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு இலங்கை தமிழ் மக்களை புலிகளிடமிருந்து காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களை கொன்றொழித்து வருகின்றன.

இலங்கையில் புரட்சி நிகழ்த்த முயன்ற J.V.P அமைப்பை இந்திய அரசின் துணையுடன் இலங்கை அரசு அழித்ததைப் பார்த்து வளர்ந்தது இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டம். இலங்கை இந்திய அரசுகள் அளிக்கும் எலும்புத் துண்டுக்கு வாலாட்டாத யாரையும் இலங்கை இந்திய அரசுகள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் .இல்லை.

1989ம் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் வகைதுறைவள நிலையம், தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கான நியாப்பாட்டையும் போராட்டம் குறித்த விமர்சனத்தையும் வெளிப்படுத்தியே வந்திருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் மாற்றுக்கருத்துக்களை துப்பாக்கி முனையால் எதிர்கொண்ட போது அதை கடுமையாக விமர்சித்து வந்துள்ளோம். தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையேயான முரண்பாட்டை உருவாக்கியபோதும் முஸ்லீம் மக்கள் மீதான அடக்குமுறைகளையும் நாம் கடுமையாக விமர்சித்தே வந்துள்ளோம்.

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினால் பெற்றுத்தர முடியாது எனக்கூறி தமிழ் மக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை தீவிர ஆயுதமயமாக்கிய இந்திய அரசு, தனது கட்டுப்பாடின்றி சுயாதீன வளர்ச்சியுற்ற புலிகளின் விமானத் தாக்குதல் நடவடிக்கைகளை தனக்கு அச்சுறுத்தலாகக் கருதி இலங்கை அரசுக்கு முழுமையான இராணுவ ஒத்துழைப்பை நல்கி தமிழ் மக்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறையை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவே உலகளாவிய விதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு செய்வதாகக்கூறி பணமும் ஆயுதங்களும் வழங்கிய இந்திய அரசு இன்று எமது போராட்டத்தை அழிப்பதற்காக இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. புலிகள் இயக்கத்துடன் முரண்பட்ட குழுக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றன. யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டு தமிழ் மக்களின் பிரதேசங்கள் யுத்த களமாக்கப்பட்டு தமிழ் மக்களை அவர்கள் சொந்த நிலங்களிலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் இன்று கோரி வருகிறது. அவர்களை பலவந்தமாக வெளியேற்ற கண்மூடித்தனமான தாக்குதல்களையும் தொடர்ந்து வருகின்றது. இதற்கு ஆதரவாக இலங்கை அரசு ஆதரவு தமிழ் குழுக்களும் கூக்குரலிடுகின்றன.

எமது கேள்வி என்னவென்றால் புலிகள் என்றால் யார்? தமிழ் மக்கள் என்றால் யார்? தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற அரசியலை முடிவுக்குக் கொணர்ந்து ஆயுதப் போராட்டத் தலைமையை இந்திய அரசு முன்தள்ளியது. தேசிய விடுதலைப் போராட்ட தலைமையை கைப்பற்றுவதற்கான போட்டியில் ஆயுதமுறையில் வெற்றிபெற்று பெருன்பான்மைத் தமிழர்களின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதென்பது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பின்தள்ளும் நடவடிக்கையாகவே நாம் கருதுகிறோம். விடுதலைப் புலிகளின் தலைமை குறித்த விமர்சனம் எமக்கு இருந்தாலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உயிர்நீத்த ஒவ்வொரு போராளியும் எங்கள் உறவுகள். எங்கள் குடும்பத்தினர். ஒரே குடும்பத்திலேயே பல கருத்துகள் முரண்பாடுகள் உண்டு. எமது குடும்ப முரண்பாடுகளை நாம்தான் தீர்க்கவேண்டும். அதற்கான தார்மீகக் கடப்பாடு தமிழ் மக்களுக்கே உண்டு. எமது உள்முரண்பாடுகளை தனக்கு சாதகமாக்கிய இந்திய அரசு சகோதரப் படுகொலைகளை திட்டமிட்டு உருவாக்கியது. எமது முரண்பாடுகளை பகைமுரண்பாடாக்கிய இந்திய அரசுக்கோ எமது முரண்பாடுகளை பயன்படுத்தி தமிழ் மக்கள் மீதான இராணுவ அடக்குமுறையை மேற்கொண்டு வரும் இலங்கை அரசுக்கோ எமது குடும்பப் பிரச்சினைகளுக்குள் தலையிடும் எந்த தார்மீகக் கட்பாடும் கிடையாது. எமது உள்முரண்பாடுகளை காரணம் காட்டி இராணுவமயமாக்கல் ஊடாக தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களை உருவாக்கி தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்க நினைக்கும் இலங்கை இந்திய அரசுகளின் நடவடிக்கைகளை நாம வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களின் போராட்டத் தேவைக்கான வெளிப்பாடு. அதளை அழிப்பதென்பது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் அவர்களது இருப்பையும் அழிக்கும் நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம்.

தமிழ் மக்களை சொந்த மண்ணிலேயே அகதி முகாம்ங்களுக்குள் அடைக்க விரும்பும் இலங்கை அரசின் செயற்பாட்டை முற்றுமுழுதாகக் கண்டிக்கின்றோம்

தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசின் இராணுவ அடக்குமுறையை உடனடியாக நிறுத்தும்படி கோருகின்றோம்

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் நிரந்தர தீர்வை பகிரங்கமாக வைக்குமாறு இலங்கை அரசை கோருகிறோம்

புலிகள் மீதான யுத்தம் தமிழ் மக்களின் மீதான யுத்தமே. இந்திய அரசே இலங்கை அரசுக்கான உதவிகளை உடனடியாக நிறுத்து.

தமிழ் மக்களின் சுயநிரணய உரிமையை அங்கீகரி

கனடிய அரசே தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு

கனடிய அரசே இலங்கையில் நடந்துவரும் தமிழின அழிப்பை கண்டித்து ஐ. நா சபையூடாக அகதிகளை பராமரிக்கவும் மீள் குடியேற்றவும், மனித உரிமைகளை கண்காணிக்கும் அமைப்பு ஒழுங்குமுறையை உடனடியாக செய்.

கனடிய அரசே ஐ.நா சாசனத்தின்படி சிறுபான்மை இனங்களுக்கான பாதுகாப்பு மற்றும் பூரண சுயநிரணய உரிமையைப் இலங்கைத் தமிழ் மக்களுக்கு பெற்றுத் தரக்கூடிய அரசியல் வழிமுறைகளைச் செய்

தமிழர் வகைதுறைவள நிலையம்
15.02.2009